# நேஷன்ஸ் மெகா சேவர் கணக்கு
# விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பிஎல்சி-பிகியு118 இல் (இனிமேல் வங்கி என குறிப்பிடப்படும்) திறக்கப்பட்டு பராமரிக்கப்படும் அனைத்து நேஷன்ஸ் மெகா சேவர் கணக்குகளையும் நிர்வகிக்கும்.

1. ஒரு கணக்கு திறக்கப்படக்கூடிய ஆரம்ப குறைந்தபட்ச வைப்பு ஐநூறாயிரம் ரூபாய் (ரூ.500,000/=) அல்லது காலத்திற்குக் காலம் வங்கியால் தீர்மானிக்கப்படும் பிற தொகை.

2. கணக்கின் மீதி ஐநூறாயிரம் (ரூ.500,000/=) ரூபாய்க்குக் கீழே வந்தால் அத்தகைய மீதிக்கு வட்டி வழங்கப்படமாட்டாது.

3. வட்டியானது நாளாந்த கணக்கு மீதியில் கணக்கிடப்பட்டு மாதாந்தம் வழங்கப்படும்.

4. மேற்குறிப்பிட்ட ஆரம்ப வட்டி மற்றும் வட்டி வீதத்தை தனது முழுமையான தற்றுணிபின் பேரில் எந்த நேரத்திலும் மாற்றுவதற்கு, திருத்துவதற்கு, கூட்டுவதற்கு குறைப்பதற்கு வங்கிக்கு உரிமை உண்டு

5. வட்டி வீதங்களின் மாற்ற அறிவிப்பு அல்லது வங்கி வலைத்தளத்தை புதுப்பிப்பதன் மூலம் வழங்கப்படும் ஏனைய வேறு அறிவிப்பு மற்றும் /அல்லது கிளை அறிவிப்புக்கள் மற்றும் /அல்லது அறிக்கைச் செய்திகள் வாடிக்கையாளருக்கான போதுமான அறிவிப்பாகக் கருதப்படுவதுடன் அவை வாடிக்கையாளரை கட்டுப்படுத்துகின்றன.

6. கணக்கு மூடப்பட்ட எந்த நேரத்திலும் வாடிக்கையாளர் மூடிய அனைத்து கணக்குகளுக்கும் கையாளுதல் கட்டணம் அறவிடப்படும்.

7. குறைந்தபட்ச இருப்புத் தொகையுடன் கணக்கு முடக்கப்படாது.

8. நேஷன்ஸ் மெகா சேவர் கணக்குகளை இடை நிறுத்த, மீளப்பெற, இரத்துச்செய்ய மற்றும் /அல்லது சேவையை நிறுத்திவிட மற்றும் அத்தகைய கணக்குகளை வங்கியின் சாதாரண சேமிப்புக் கணக்குகளாக கருதவும் வங்கிக்கு உரிமையுண்டு

9. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் வாடிக்கையாளரைக் கட்டுப்படுத்தும் நேஷன்ஸ் சேவர் கணக்குகளின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் ஏனைய பொது வியாபார நிபந்தனைகளுக்கு மேலதிகமானதாகும் . இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை இணைக்க தேவையேற்படின் மட்டுமே திருத்தியமைக்கப்படும்

10. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் நேஷன்ஸ் சேவர் கணக்குகளின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது வேறு ஏதேனும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டால் அந்த முரண்பாட்டின் அளவிற்கு மட்டுமே இவை மேலோங்கும்.

11. இங்கு கையொப்பம் இடுவதற்கு முன்னர் மேலுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் நேஷன்ஸ் சேவர் கணக்குகளை நிர்வகிக்கும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் வங்கியின் பொது வியாபார நிபந்தனைகள் தொடர்பான விபரங்கள் எனக்கு/எங்களுக்கு வழங்கப்பட்டு, மற்றும் விளக்கம் அளிக்கப்பட்டது மற்றும் நான்/ நாங்கள் குறித்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து புரிந்து கொண்டேன் /கொண்டோம் மற்றும் அதற்குக் கட்டுப்படுவதற்கு ஒப்புக்கொள்வதாக இதன்மூலம் நான்/நாங்கள் உறுதிப்படுத்துகிறேன்/ உறுதிப்படுத்துகிறோம்.

...............................................
கையொப்பம்
பெயர்:

...............................................
கையொப்பம்
பெயர்: